**ORIGINAL ARTICLE**

# மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் காட்டும் சைவ சித்தாந்த நெறி

## [MEYKANDAR ARULIYA SIVAGNANABOTHAM KAADDUM SAIVA SIDDHANTA NERI]

## SAIVA SIDDHANTA CONCEPT IN MEYKANDAR'S SIVAGNANABOTHAM

**இல. வாசுதேவன் [1] / L. Vasudevan [1]**

[1]சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா. / Sultan Idris Education University, Malaysia. மின்னஞ்சல் / Email: vas_devan@hotmail.com

DOI: https://doi.org/10.33306/mjssh/38

**ஆய்வுச் சாரம்**

இந்தக் கட்டுரை, பதினான்கு சாத்திர நூல்களில் முதன்மையான மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம் நூலின் சிறப்பையும் சித்தாந்த மரபையும் எடுத்துரைக்கின்றது. இளையோர் எளிய முறையில் சிவஞானபோதம் நூற்பாக்களின் சாரத்தையும் சித்தாந்த மெய்ப்பொருளையும் இனங்கண்டு உள்வாங்கிக்கொள்ள இது விளக்கப் பட்டிருக்கிறது. சிவஞானபோதம் நூற்பாக்களின் 'மறைமலையடிகளின் சித்தாந்தச் சுருக்கப் பகுப்பு முறையில்' 12 நூற்பாக்களோடு எவ்வாறு பன்னிரு திருமுறைகள் ஒத்திருக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

**கருச்சொற்கள்:** மெய்கண்டார், சிவஞானபோதம், சைவசித்தாந்தம், சித்தாந்த நெறி, இறை(பதி), உயிர்(பசு), தளை(பாசம்).

**Abstract**

This article highlights the excellence and ideological legacy of Sivagnanapodam, the first of the fourteen Meikandar. The younger generation can easily understand essence of Shivanagodham and the ideological realism. This study is to see the similarities between Sivagnanapodam's "Maraimalaiyadigalin Chittantha Churukkap Paguppu Murai" and "Panniru Thirumurai".

**Keywords:** Saiva Siddhanta Concept, Meykandar's Sivgnanabotham, Irai, Uyir, Talhai

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 27th June 2019, revised 20th July 2019, accepted 10th August 2019

## முன்னுரை

சுப்புரெட்டியார், (2010)[1] கூற்றுப்படி, சித்தாந்த நெறி சைவத்திற்கே உரிய தனிச்சிறப்பு. உலகில் உள்ள சமயங்கள் யாவற்றையும் தன்னகத்தே கொண்டு தனித்து நிற்பது சைவசித்தாந்தம். உயிர் உடம்புடன் கூடி வாழும் வாழ்வில் முழுமுதலாகிய கடவுளை அடைந்து வாழ்வாங்கு வாழ்வதே பிறவி எடுத்ததின் பயனாகும். அவ்வாறு இறைவனை அடையும் முயற்சிக்குத் தடையாக இருப்பன இருள்சேர் இருவினைகள். விணைகட்குக் காரணம் பற்றுகள். அதனால்தான், "பற்றுக பற்றான் பற்றிணை" என்று திருவள்ளுவர் கூறுகின்றார். இறைவன், உயிர், தளை(பற்று) ஆகிய முப்பொருள் என்பது மெய்யியல். சைவ சித்தாந்த நூல்களில் சிவஞானபோதம் முதல் நூலாக வைத்தெண்ணப்படுகின்றது. கடவுள், உயிர், தளை, மாயை, வினை, வீடுபேறு ஏன்னும் ஆறு இயல்புகளை அளவையியல் ஆராய்ச்சிவழி நன்கு விளக்கும் தனி முதல்நூல் சிவஞானபோதமாகும். இவ்வளவு நேர்த்தியாக உலகில் வேறெந்த மொழியிலும் இல்லை (மறைமலையடிகள், 2005)[2]. 13 ஆம் நூற்றாண்டில் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் பன்னிரண்டு நூற்பாக்களை (சூத்திரங்களை) உடையது. அந்நூற்பாக்கள் பன்னிரண்டும் நாற்பது வரிகளை உடையன. நூற்பாக்களின் கருத்துக்களைத் தக்க சான்றுகள் கொண்டு எடுத்துரைக்கும் அதிகரணங்கள் 39 உள்ளன; அவற்றை விளக்க எடுத்துக்காட்டாக 81 வெண்பாக்கள் உள்ளன. இவ்வாய்வானது, 39 அதிகரணங்களையும் மற்றும் 81 வெண்பாக்களையும் தவிர்த்து, சிவஞானபோதத்தின் பன்னிரண்டு நூற்பாக்களில் காணப்படும் சித்தாந்த நெறிகளை மட்டுமே மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாய்வானது, சிவஞானபோத பன்னிரண்டு நூற்பாக்களையும் தேர்ந்தெடுத்து திருமுறை, திருவாசகச் சான்றுகளுடன் முப்பொருள் உண்மைகளை விளக்குகின்றது.

## ஆய்வு நோக்கம்

இருபத்தோராம் நூற்றாண்டின் பல்வேறு மாற்றங்களினால், இளம் சமூகத்தினர் பல்வேறு வாழ்க்கைச் சூழலை எதிர்க்கொண்டு வாழ்கின்றனர். ஆன்மீக நாட்டமும் சைவத்தையும் பின்பற்றுவோர் குறைவான எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றனர். உண்மை ஆன்மிகத்தை, சைவ சித்தாந்த நெறிகளை அடைய வேண்டும் எனும் வேட்கையில் உள்ளவர்களுக்கு இவ்வாய்வுக்கட்டுரை புதிய தெளிவுகளைக் கொடுக்கும் எனக் கட்டுரையாளர் கருதுகிறார். சிவஞானபோதம் கற்பது மிகக் கடினம் என்கிற சிந்தனையைத் தகர்ப்பதும் இளையோரும் முயன்றால் கற்றுணரலாம் என்பதே ஆய்வாளரின் கருத்தாகும்.

**மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம் விளக்கமும்**

திருவெண்காடு என்னும் திருத்தலத்தில் பிறந்தவர் மெய்கண்டார். திருவெண்காடு என்பதற்கு வட மொழியில் சுவேதவனம் என்று பொருள். எனவே, அவருக்குச் சுவேதவனப் பெருமான் என்னும் இளமைக்காலப் பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. அவர் வாழ்ந்த காலம் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும். சிவஞானபோதம் 12 நூற்பாக்கள் அல்லது சூத்திரங்கள் கொண்டது. ஒவ்வொரு நூற்பாக்களின் சுருக்கமான பொருள் விளக்கம் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது (சித்தலிங்கம், 2002)[3].

**முதல் நூற்பா**

அவன், அவள், அது எனப் பிரித்துக் கூறப்படக் கூடியது உலகம். எனவே, அது பல பொருள்களின் சேர்க்கையாகும். தோற்றம், நிலை, ஈறு என்னும் மூன்று நிலைகளுக்கு அது உட்படுகிறது. சிவபெருமான் இதைத் தோற்றுவிக்கிறார். உலகம் இவ்வாறு உருவாவதற்கும் அழிவதற்கும் உயிர்கள் ஆணவத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகவே ஆகும்.

**இரண்டாம் நூற்பா கூறுவது**

முதல்வனாகிய இறைவன், உயிர்களில் கலந்து ஒன்றாகியும், பொருளால் வேறாகியும் உயிர்க்குயிராய் இருந்து அறிவதனால் உடன் இருக்கிறான். உயிர்கள் இரு வினைகள் காரணமாக இறந்து பிறக்கின்றன.

**மூன்றாம் நூற்பா பகர்வது**

மயையால் பின்னப்பட்டது இந்த உடல். உயிர் உடம்பிலுள்ள ஐம்பொறிகள், ஐம்புலன்கள் ஆகியவற்றிலிருந்து வேறானது. தூக்கத்தில் உணவு உட்கொள்ளலும் செயல் புரிதலும் இல்லையென்பதால் உடல் வேறு உயிர் வேறு ஆகும். உணர்த்த உணரும் அறிவுடையது. எனவே உயிர் இறைவனிடமிருந்து வேறுபட்டது.

**நான்காம் நூற்பா கூறும் பொருளானது**

பசுவாகிய உயிர்(ஆன்மா) இலக்கணத்தைக் கூறுகிறது. உயிர், அகக் கருவிகளாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவற்றில் ஒன்றன்று. எப்போதும் தன்னோடு கூடியுள்ள

ஆணவ மலத்தினால், உயிர் தானே அறிவதில்லை. அகக்கருவிளோடு இணைந்து அது ஐந்தவத்தைப் படுகிறது.

**ஐந்தாம் நூற்பா கூறுவதாவது**

உயிர் செலுத்துவதனால்தான் ஐம்பொறிகளான மெய், வாய், மூக்கு, கண், செவி ஆகியவை செயல்படுகின்றன. ஆனால், அவை தம்மையும் தம்மைச் செலுத்தும் உயிரையும் அறியமாட்டா. அதுபோல, உயிரும் தன்னையும், தன் அளவிற்கு விளக்கந்தரும் திருவருட்சக்தியையும் அறிவதில்லை. காந்தத்தின் முன்வைத்த இரும்பு போல உயிர் இறைவன்பால் செயல்படுகிறது. ஆயினும், இறைவன் யாதொரு மாற்றம் அடைவதில்லை.

**ஆறாம் நூற்பா கூறும் பொருளானது**

அறியப்படும் காரியமாம் உலகிற்கும், அறியப்படாத காரணமாம் மாயைக்கும் வேறாகச் சிவம் உள்ளது. அது சத்து, சித்து, ஆனந்த வடிவமாய் இருக்கிறது. இறைவன் உயிரறிவால் அறியப்படாதவன். பதி அறிவால் அறியக் கூடியவன். அதனாலே அறிஞர் இறைவனை 'சத் சித் ஆனந்த' சிவசத்து என்று கூறுகின்றனர்.

**ஏழாம் நூற்பா பகர்வது**

உயிரின் சிறப்பியல்பை விளக்குகிறது. சிவசத்தின் முன் எல்லாப் பொருளும் பாழ். அதனால்தான் அது தளையை (பாசத்தை) அறியாது; அனுபவிக்காது. அசத்தாகிய உலகம் அறிவின்மையாலே எதனையும் அறியாது; அனுபவியாது. உயிர் இரண்டுமாய் இருத்தலினால் இரண்டையும் அறியும்; அனுபவிக்கும். சிவத்தையும் உலகத்தையும் அறியும் அறிவு ஒன்று உளது. அஃது அவ்விரண்டுமல்லாத ஆன்மாவாம்.

**எட்டாம் நூற்பா கூறுவது**

பொறி புலன்களுக்கிடையே நெடுங்காலம் வாழ்ந்துவிட்டதனால், உயிர் (ஆன்மா) தன் உண்மையில்பை அறியாது. இறைவன் குருவடிவிலே வந்து உண்மையை உணர்த்துகின்றான். உயிர், இறைவனோடு 'அத்துவிதமாக' நிற்கும் நிலையினை உணர்ந்து அவன் திருவடிகளை அடையும். அஃது ஆன்ம தத்துவ ஞானத்தால் நிகழும்.

**ஒன்பதாம் நூற்பா கூறும் கருத்து**

பாச ஞானத்தால் அறியப்படாத இறைவனைப் பதி ஞானத்தால் உயிர் அறிகிறது. அப்படிப்பட்ட உயிருக்கு உலகம் காணலாகக் கழிகிறது. இறைவன் வெளிப்படுகின்றான். இதனைத் தொடர்ந்து துய்ப்பதற்காக உயிர் திருவைந்தெழுத்தை ஓதுகிறது.

**பத்தாம் நூற்பா கூறும் கருத்தாவது**

இவ்வாறு இறைவனை உணர்ந்து ஒன்றி நிற்கும் உயிர், இறைவன் வேறு, தான் வேறு என்றில்லாமல் இறைவன் திருவடியிலே நிற்கிறது. எனவே, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் இல்லாமல் ஒழிகின்றன.

**பதினொன்றாம் நூற்பா கூறுவது**

பொருள்களைக் காண்பதற்கு உயிர் கண்ணுக்கு உதவுகிறது. கண்ணுக்குக் காட்டித் தானும் காண்கின்ற உயிர் போல இறைவன், பொருள்களை உயிர் அறிய உதவித் தானும் அறிகிறான். இதனால், உயிர் இறைவனிடம் குன்றாத அன்பு கொண்டு அவன் திருவடியாகிய அனுபவத்தைப் பெறும்.

**பன்னிரண்டாம் நூற்பா கூறும் கருத்தாவது**

சீவன் முத்தர்களைப் பற்றிச் சொல்கிறது. குறையாத அன்போடு இறைவனைச் சேர்ந்த உயிர் அதற்குத் தடையாக உள்ள மும்மலங்களை ஞான நீரால் கழுவி, இறைவனை என்றும் மறக்காத அடியார்களோடு கலந்திருந்து, சிவவேடமும், சிவன் கோயிலும் சிவன் வடிவே என்று கண்டு வழிபடும்.

**சிவஞானபோதம் நூற்பா (சூத்திரங்கள் ) பகுப்பு முறை**

சிவஞானபோதம் பன்னிரண்டு நூற்பாக்களைக் (செய்யுள்களைக்) கொண்டது. முதல் ஆறும் 'பொது அதிகாரம்' எனவும், பின் ஆறும் 'உண்மை அதிகாரம்' எனவும் வழங்கப்படுகின்றது. தமிழறிஞர் மறைமலையடிகளார், பன்னிரண்டு செய்யுளுக்கும் ஒவ்வொரு சுருக்கக்குறிப்பு வழங்கியுள்ளார். ஆயினும், சைவ அறிஞர்கள் சிலர், சிவஞானபோதம் நூலை நான்கு இயல்களாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு இயலிலும் மூன்று நூற்பாக்கள் (சூத்திரங்கள்) உள்ளன. அவை, பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் எனப்

பகுக்கப்பட்டுள்ளது. இதுவரை திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்டு ஆய்வாளர் பின்வரும் அட்டவணையை உருவாக்கியுள்ளார்.

அட்டவணை 1

*சிவஞானபோதம் நூற்பா பகுப்பு முறைமை*

| சூத்திரப் பொருள் (பொதுப் பகுப்பு) | சிவஞானப்போதம் நூற்பா ( சூத்திரச் செய்யுள்) | சூத்திரப் பொருள் (மறைமலையடிகள் பகுப்பு முறை) |
|---|---|---|
| பிரமாண இயல் | செய்யுள் 1 | கடவுளுண்மை |
| | செய்யுள் 2 | வினையுண்மை |
| | செய்யுள் 3 | உயிருண்மை |
| இலக்கண இயல் | செய்யுள் 4 | மலவுண்மை |
| | செய்யுள் 5 | அருளுண்மை |
| | செய்யுள் 6 | கடவுளியல் |
| சாதன இயல் | செய்யுள் 7 | உயிரியல் |
| | செய்யுள் 8 | மலத்தியல் |
| | செய்யுள் 9 | மாயையியல் |
| பயன் இயல் | செய்யுள் 10 | வினையியல் |
| | செய்யுள் 11 | வீட்டியல் |
| | செய்யுள் 12 | பேற்றியல் |

**சிவஞான போதமும் பன்னிரு திருமுறைகளும்**

சிவஞான போதத்திற்கும், பன்னிரு திருமுறைக்கும் உள்ள ஒத்த கருத்துகள் நிறைய உள்ளன. அவற்றுள் ஒவ்வொரு நூற்பாவுக்கும் திருமுறைகளின் இணைப்பை ஆய்வாளர் பின்பவரும் பாடல்களின் வழி காணலாம்.

**சிவஞானபோதம் முதற் நூற்பாவும் முதற்றிருமுறையும்**

தோடு டையசெவி யன் விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள் செய்த
பீடு டைய பிரமாபுர மேவிய பெமா னிவனன்றே.

(1.1.1 திருப்பிரமபுரப்பதிகம்)

இப்பாடல் இறைவன் தனது சத்தியோடு இணைந்து பிரிவில்லாமல் ஐந்தொழில் புரிவதன் மூலம் உலகு உயிர் தோற்றம், ஒரு கால எலைவரை நிலைநிற்றல், ஒடுக்கம் பெறுகின்றன எனப் பதி உண்மையைக் கூறும் முகத்தால் சிவஞான போத்ததின் முதல் நூற்பாவுடன் 'கடவுளுண்மை' இணைந்து நிற்கிறது.

**சிவஞானபோதம் இரண்டாம் நூற்பாவும் இரண்டாம் திருமுறையும்**

கடல்வரை யோதமல்கு கழிகானல் பானல் கமழ்காழி யென்று கருதப்
படுபொரு ளாறுநாலும் உளதாக வைத்த பதியான ஞான முனிவன்
இடுபறை யொன்றவத்தர் பியன்மே லிருத்தின் இசையா லுரைத்த பனுவல்
நடுவிரு ளாடுமெந்தை நனிபள்ளி யுள்க வினை கெடுதலாணை நமதே

(2.84.11 திருநனிபள்ளி)

இப்பாடல் திருக்கடைக்காப்பாய், நனிபள்ளியில் எழுந்தருளியிருக்கும் இறைவரை நினைந்து தியானிக்க(உள்க), வினைகெடும் என்று ஆணையிட்டுக் குறியதை உணர்த்துகிறது. இது பாச நீக்கத்திற்குரிய சாதனை எனலாம். இஃது இரண்டாம் நூற்பாவுடன் 'வினையுண்மையோடு பொருந்தி நிற்கிறது.

**சிவஞானபோதம் மூன்றாம் நூற்பாவும் மூன்றாம் திருமுறையும்**

ஊழியூழி வையகத் துயிர்கடோற்று வானொடும்
ஆழியானுங் காண்கிலா வானைக்காவி லண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச் சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகண் மாயுமே.

(3.53.11 திருவானைக்கா)

இப்பாடல் சிவஞானபோதத்தின் 'உயிருண்மையை' விளக்குகிறது. திருக்கடைக்காப்பாக ஊழி தோறும் இறைவன் தோற்றுவிக்கின்ற உயிர்கள் இப்பதிகப் பாடல்களை ஓதி இறைவன வாழ்த்தி வணங்குபவர்களின் வல்வினைகள் தீரும் என்பதைக் குறிக்கின்றது.

**சிவஞானபோதம் நான்காம் நூற்பாவும் நான்காம் திருமுறையும்**

*கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான் அறியேன்*
*ஏற்றாய் அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும் ….*

(4.1.1திருவதிகை வீரட்டானம்)

இப்பதிகப்பாடல் உயிர், உடல்பெற்று உலகில் வாழும் நிலையில் மலமறைப்பால் மாறுபட்ட நிலையில் இயங்குவதைக் குறிப்பிடுகின்றது. இப்பதிகம் சிவஞானபோதம் மலவுண்மையோடு பொருந்தி வருகின்றது.

**சிவஞானபோதம் ஐந்தாம் நூற்பாவும் ஐந்தாம் திருமுறையும்**

முருட்டு மெத்தையில் முன்கிடத் தாமுனம்
அரட்டர் ஐவரை ஆசறுத் திட்டுநீர்
முரட்ட டித்தவத் தக்கன்றன் வேள்வியை
அரட்ட டக்கித னாரூ ரடைமினே

(5.7.5 திரு ஆரூர்)

இப்பாடல் மரணப் படுக்கையில் கிடத்தப்படுமுன் ஆருயிர்கள் ஐம்புலன்களின் ஆதிக்கத்தை அடக்கி அவற்றின் குற்றத்தைக் களைய ஆரூர் பெருமாளின் அருளைப் பெற வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. சிவஞானபோதம் ஐந்தாம் நூற்பாவின் 'அருளுண்மையுடன்' பொருந்தி வருகின்றது.

**சிவஞானபோதம் ஆறாம் நூற்பாவும் ஆறாம் திருமுறையும்**

அரியனை அந் அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்…

(6.1.1 கோயில்)

இப்பாடல் சிவஞானபோதம் ஆறாம் நூற்பாவான பதி இலக்கணமான 'கடவுளியல்' உடன் பொருந்துகிறது. இறைவனை அரியனை யென்றும் யார்க்கும் தெரியாத தத்துவன் என்றும், அந்தணர்தம் சிந்தையுடையவன் என்றும் பெரியானை என்றும் குறிப்பிடுகின்றது.

**சிவஞானபோதம் ஏழாம் நூற்பாவும் ஏழாம் திருமுறையும்**

ஊனாய்உயி ரானாய்உட லானாய்உல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்…
(7.1.7 திருவெண்ணெய் நல்லூர்)

இப்பாடல் இறைவன் அனைத்திலும் கலந்திருப்பதால் உயிர் இறைவனை அறிந்து ஆட்படும் என சிவஞான போதம் ஏழாம் நூற்பாவான ' உயிரியல்' உடன் பொருந்துகின்றது.

**சிவஞானபோதம் எட்டாம் நூற்பாவும் எட்டாம் திருமுறையும்**

"கோகழி ஆண்ட குருமணி தன்தாள் வாழ்க" வரி:3
(8.1.1 திருவாசகம்: சிவபுராணம்)

"பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே" வரி:64
(8.1.1 திருவாசகம்: சிவபுராணம்)

"கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே" வரி: 88
(8.1.1 திருவாசகம்: சிவபுராணம்)

சிவஞானபோதம் எட்டாம் நூற்பாவுடன் இணைந்த எட்டாந்திருமுறையான திருவாசகத்தின் சிவபுராண வரிகள் 'மலத்தியல்' பற்றியது. இறைவன், பாசநீக்கத்திற்கும் திருவடிப்பேற்றிற்கும் துணை புரிபவன் என்று உணர்த்துகின்றது.

**சிவஞானபோதம் ஒன்பதாம் நூற்பாவும் ஒன்பதாம் திருமுறையும்**

சொக்கர்ஒத் திரவி நூறா யிரத்திரள் ஒப்பாந் தில்லைச்
சொக்கர்அம் பலவர் என்னும் சுருதியைக் கருத மாட்டா ..
(9.4.8 இணங்கிலா ஈசன்)

இப்பாடல் திருமாளிகைத்தேவர் இணங்கிலா ஈசர்க்கும் ஈசனடியார், மாயைபோன்ற செருக்கு மிக்கவரையும், கீழ் இனத்தவராகிய வலிமை மிக்க வஞ்சகரையும், புத்தர் முதலிய பொய்யுரையும் என் கண்கள் காணாது; அவர்களோடு உரையாடாது என்று கருத்துரைக்கின்றது. இது ஒன்பதாம் நுற்பாவின் ‘மாயையியல்’ பகுப்போடு ஒத்திருக்கின்றது.

**சிவஞானபோதம் பத்தாம் நூற்பாவும் பத்தாம் திருமுறையும்**

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு அநாதி
பதியினை சென்றணு காப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே

(10.1.115 திருமந்திரம்:உபதேசம்)

இத்திருமந்திரப் பாடல்,ஆன்மாக்களின் (உயிர்களின்) தலைவன் பதி, ஆன்மாவாகிய உயிர்கள் பசு, உயிர்களைப் பிடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயஓ ஆகிய மும்மலங்களும் பாசம் என்பதை விளக்குகின்றது. பழமைவாய்ந்த இறைவனை அடையாமல் தடுப்பவை வினைகள். சிவஞாபோதம் பத்தாம் நூற்பாவும் பத்தாம் திருமுறையான் திருமந்திர பாடலும் ‘வினையியலோடு’ ஒத்துள்ளது.

**சிவஞானபோதம் பதினொன்றாம் நூற்பாவும் பதினொன்றாம் திருமுறையும்**

எய்ய நல்இசைச் செவ்வேல் சோய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவு நீ நயந்தனையாயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்நசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே.. வரி : 61-66

(11.1.17 திருமுருகாற்றுப்படை)

உயிர் திருவடியைப் பெற ஆராக்கதல் கொள்ளவேண்டும் என்று உணர்த்துகிறது இத்திருமுருகாற்றுப்படை, பதினொன்றாம் திருமுறை. இப்பாடல் சிவஞானபோதம் பதினொன்றாம் நூற்பாவாகிய ‘வீடுபேற்றியல்’

**சிவஞானபோதம் பன்னிரண்டாம் நூற்பாவும் பன்னிரண்டாம் திருமுறையும்**

இந்த 12 ஆம் நூற்பாவில் மூன்று கருத்துகள் அடங்கியுள்ளன. (1) சிவனடியார் (தொண்டர்) இலக்கணம், (2) சிவனடியார் வேடத்தையும், சிவசின்னத்தையும் சிவனாகவே போற்றுதல் (3) சிவலயத்தைச் சிவனாகவே போற்றித் தொழுது வணங்குதல். மேலும், எட்டாவது நூற்பாவில் இறைவனே குருவாகத் திருமேனி கொண்டு வந்து மெய்யுணர்வளிப்பார் (சோமசுந்தரம், 2006)[4]. இறைவனே தடுத்தாள்வார்; வீடுபேறு அளிப்பார் என்பதை வலியுறுத்தும். பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள சிவனடியார்கள் சிவப்பேற்றுக்குச் சிவனடியார் இணக்கத்தின் இன்றியமையாமையை நன்குணர்ந்து இறைவனிடமும், சிவனடியார்களிடமும் உள்ள பேரன்பினால் இறைவர்க்கும் அடியார்க்கும் மென்தொண்டோ அல்லது வன்தொண்டோ நியமமாகச் செய்து முக்தி (வீடுபேறு) பெற்றவர்கள் ஆவர். பெரிய புராணத்தில் (12 ஆம் திருமுறை) சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறே சான்றாகும். எனவே, சிவஞானபோதம் 12 ஆம் நூற்பாவும், 12 ஆம் திருமறையும் பேரின்ப சிவலோகப் 'பேற்றியல்' வெகுவாக ஒத்துள்ளது.

**முடிவுரை**

இவ்வாய்வுக் கட்டுரை சிவஞான போதம் கூறும் சைவ சித்தாந்த நெறி பற்றி மீள்நோக்குப் பார்வையைக் காட்டுகின்றது. சிவஞான போதத்தின் பன்னிரண்டு நூற்பாக்களின் விளக்கமும், அதன் சுருக்கமும் ஆராயப்பட்டுள்ளது. மேலும், சிவஞானபோதம் நூற்பா அமைப்பு முறைமை அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது. சிவஞானபோதம் முதலிய சாத்திர ஞான நூல்கள் கற்பது கடினம் என்பர். முதியவர்களும் அறியவொண்ணா இருப்புக் கடலை ஒத்தன என்பர் (கோவை கிழார், 2012)[5]. ஆயினும், இன்றைய இளையோர் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வலையில் சிவஞான போதத்தின் 12 நூற்பாக்களும் பன்னிரு திருமறைகளும் எவ்வாறு சித்தாந்த கருத்துகளுடன் ஒத்துள்ளன என்று ஆய்வாளர் சான்றுகளுடன் காட்டியுள்ளார். இவ்வாய்வின் வழி சித்தாந்தப் பற்றாளர்களுக்கும் சைவ சித்தாந்த நெறியில் ஆர்வம் கொண்ட இளையோருக்கும் புதிய கருத்துகள் பெறுவர் என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

**துணைநூற்பட்டியல்:**

1. Subburettiyar, N. (2010). *Introduction to Saiva Sithantham (சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்).* Chennai: Poompuhar Publications.
2. Maraimalaiyatikal. (2005). *Research of Sivanyanabothar (சிவஞானபோத ஆராய்ச்சி).* Chennai: Poompuhar Publications.
3. Sittalingam D, B. (2002). *History and development of Saivam samayam – 3rd edition (சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும் - மூன்றாம் பதிப்பு).* Chennai: Thiruvarasu Book Center.

4. Somasundaram, M. (2006). *Essays on Saiva Sithantham: Volume 2 - First edition (சைவ சித்தாந்தக் கட்டுரைகள்:தொகுப்பு 2 - முதற்பதிப்பு).* Kuala Lumpur: Pelangi Publications.
5. Kovai Kilar. (2012). *Children's Shivanyanam (சிறுவர் சிவஞானம்).* Chennai: Kumarathevar Publications.